# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1031/2022   P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பாரத் | த–பெ | செல்வம் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 36/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | நடத்துநர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2025**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் காரைக்குடியில் வசித்து நடத்துநர் வேலை செய்து வருகிறேன். எனது தாத்தா சின்னையா என்பவர் ஒரு நாள் கம்பனூரில் இருந்து வீட்டிற்கு திரும்பி கொண்டிருந்தார் குறிப்பாக 11.01.2019 அன்று காலையில் என்ன நேரம் என்று தெரியாது அவர் ஊருக்கு சென்று விட்டு நடந்து காரைக்குடி மின்சார வாரியம் அலுவலகத்தின் அருகில் நடந்து வரும் போது 3 நபர்கள் ஒரே இருசக்கர வாகனத்தில் spelender plus (அருகில் இருந்தவர்கள் மேற்படி நபர்கள் மது போதையில் இருந்ததாக சொன்னார்கள்.) வந்து மேற்படி நடந்து சென்று கொண்டிருந்த எனது தாத்தாவின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

இந்த விபத்தில் காயம் பட்டிருந்த எனது தாத்தாவை காரைக்குடி அரசு மருத்துமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக நாகராஜ் என்ற ஆட்டோ ஒட்டுநர் என்னிடம் தகவல் சொன்னார்கள். பின்னர் இந்த தகவலை அறிந்த நான் வேலைக்கு சென்று விட்டேன். மீண்டும் சொன்னார் அதன் அடிப்படையில் நான் காரைக்குடி அரசு மருத்துமனைக்கு சென்று பார்த்த பொழுது எனது தாத்தாவிற்கு முகம் முழுவதும் வீங்கி இருந்தது. வலது நெஞ்சு பகுதி வீக்கம் இருந்தது. வலது முலங்கால் வீக்கமாக இருந்ததது. பின்னர் மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்காக அவரை அழைத்து சென்றேன். முதல் உதவி சிகிச்சைகள் மேற்கொண்டார்கள். மீண்டும் எனது தாத்தாவிற்கு இரத்தம் வந்ததால் மருத்துவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் மதுரை அரசு மருத்துமனையில் மேல் சிகிச்சைக்காக சேர்த்தோம்.

13.02.2019 அன்று சிகிச்சை பலன் இன்றி எனது தாத்தா இறந்து விட்டார். பின்னர் நடந்த விவரங்களை சொல்லி காரைக்குடி வடக்கு காவல் நிலையம் சென்று எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்தேன். அந்த புகார். **அ.சா.ஆ.1**.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரியை எனக்கு தெரியாது. சம்வம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவம் நடந்த 2 நாட்கள் கழித்து தான் புகார் அளிதேன். அந்த இரண்டு நாட்களும் நான் மருத்துமனையில் இருந்தேன். எனது புகாரில் வாகனத்தின் பதிவு எண், வாகனத்தின் நிறம் எதுவும் சொல்லவில்லை என்றால் இல்லை. புகாரில் வேல் முருகன் என்ற நபரின் பெயரும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா சின்னையவுக்கு 75 வயது இருக்கும். சுகர், பிரசர் எதுவும் கிடையாது. எனது புகாரிலோ அல்லது வாக்குமூலத்திலோ சொல்லாததை சாட்சியில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து இழப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3 பேர் இருசக்கர வாகனத்தில் வந்து எனது தாத்தாவை மோதியதாக சொன்ன 3 நபர்கள் அவர்களின் பெயர்களை நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். 3 பேரும் தனித்தனி வாகனத்தில் வந்தார்களா அல்லது ஒரே வாகனத்தில் வந்தார்களா என்று நான் கேட்டு தெரிந்து கொள்ள வில்லை என்றால் சரிதான். என்னுடைய புகாரில் 3 பேரும் ஒரே வாகனத்தில் வந்து இடித்தார்கள் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் புகாரில் 3 நபர்கள் ஒரே இருசக்கர வாகனத்தில் வந்து எனது தாத்தாவின் மோதி விபத்தை ஏற்படுத்தியதாக புகாரில் குறிப்பிட்டுள்ளேன். நான் பொய் சொல்கிறேன். அவ்வாறு புகாரில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.18 10:27:54 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1031/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நாகராஜ் | த–பெ | குருசாமி |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 53/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆட்டோ ஓட்டுநர். | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2025**
**எதிரி ஆஜர்.**

--------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் காரைக்குடியில் வசித்து ஆட்டோ ஓட்டுநராக உள்ளேன். 11.01.2019 அன்று நான் காரைக்குடி மின்சார வாரிய அலுவகத்தின் அலுவலக சாலை அருகில் உள்ள ஆட்டோ ஸ்டான்டில் இருந்த போது எனக்கு தெரிந்து சின்னையா என்பவர் பாகம்பிரியாள் டீக்கடை எதிரெ உள்ள சாலையில் கீழே விழுந்து கிடந்தார். அவரை நான் காரைக்குடி பழைய அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். மற்றபடி சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள். பின்னர் இந்த தகவலை பாரத் என்பவரிடம் சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரியை எனக்கு தெரியாது நான் பாத்தது இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.18 10:28:02 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1031/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | வேல்முருகன் | த–பெ | முனியசாமி |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 42/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | மீன்கடை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2025**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் காரைக்குடியில் வசித்து மீன் கடை வைத்துள்ளேன். 01.11.2019 அன்று நான் காலை 7.00 மணியளவில் வா.உ.சி சாலை பாகம்பிரியாள் டீக்கடையில் நான் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அப்பொழுது டீ சாப்பிட வந்த சின்னையா என்பவரை சம்பவ நேரத்தில் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் அவர் மீது மோதி விபத்தை ஏற்ப்படுத்தினார். அவரை உள்ளூரில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். பின்னர் அவர் இறந்து விட்டதாக சொன்னார்கள். போலீசார் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

எதிரியை எனக்கு தெரியாது எதிரியை நான் பார்த்தது இல்லை. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. நான் மருத்துமனைக்கு யாரையும் அழைத்து செல்லவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.18 10:28:11 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி